# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் – **12.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA-5081/SCIC/2023</u>**

திரு S. ஞானசேகர்          மேல்முறையீடுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/          பொது அதிகார அமைப்பு
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்,
திருமங்கலம், மதுரை.

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 13.12.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் திருமங்கலம் சார்பதிவகம் தொடங்கப்பட்ட ஆண்டு முதல் பணியாற்றிய சார்பதிவாளர்களின் பெயர் பணிபுரிந்த காலம் பற்றிய விவரம், சார்பதிவகத்தில் பணிபுரிந்து வரும் ஊழியர்களின் பெயர், பதவி பணிபுரிந்தகாலம் மற்றும் ஊதிய விவரப்பட்டியல் போன்ற விவரங்களை 10 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். இதற்கு பொதுத் தகவல் அலுவலர் 22.01.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பதில் /தகவல்கள் அளித்துள்ளார்.

2. அதன் பின்னர் மனுதாரர் பிரிவு 19(1)ன் கீழ் 03.02.2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதனை தொடர்ந்து ஆணையத்திற்கு 20.03.2023 தேதியிட்டு பிரிவு

19(3)ன் கீழ் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனு வழக்கு எண்.SA-5081/2023 ஆக பதிவு செய்யப்பட்டு மனுதாரர் கோரும் தகவல்களை வழங்க 07.06.2023 தேதியிட்ட அறிவிப்பு கடிதத்தின் மூலம் பொதுத் தகவல் அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் பொதுத் தகவல் அலுவலர் 07.11.2024 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கி அதன் விவரத்தினை ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். அதன் பேரில் மனுதாரர் 24.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனை மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்நிலையில் இந்த மேல் முறையீட்டு மனுவின்மீது காணொளி காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.04.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது. பொதுத் தகவல் அலுவலர் 02.04.2025 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தனக்கு உடல் நிலை சரியில்லை என்பதால் கால அவகாசம் வழங்குமாறு கோரியதன் அடிப்படையில் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 08.05.2025க்கு பட்டியிலிட்டு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 12.06.2025க்கு பட்டியிலடப்பபட்டது.

4. இன்றைய (12.06.2025) காணொளி காட்சி விசாரணைக்கு மனுதாரர் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் பொதுத் தகவல் அலுவலர் சார்பாக அவரது பிரதிநிதி திரு நல்லகுமார், உதவியாளர் நேரில் ஆஜராகியிருந்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான அலுவலர், 22.01.2023 மற்றும் 07.11.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலமாக மனுதாரருக்கு தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்பித்தார். மனுதாரர் 24.12.2024 தேதியிட்டு ஆணையத்திற்கு தனது ஆட்சேபனை மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**6.** விசாரணையின்போது மனுதாரர் தன்னுடைய (13.12.2022 தேதியிட்ட) தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு உரிய காலத்தில் (30 தினங்களுக்குள்) தகவல்கள் வழங்கப்படவில்லையென்றும் 22.01.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டது என்றும், தனக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். இருதரப்பு வாதங்கள் மற்றும் வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது:

- **இனங்கள் 2 மற்றும் 8க்கு உரிய திருத்திய பதிலும், இனங்கள் 6 மற்றும் 7க்கு உரிய ஆவணங்கள் தொடர்பான கட்டண விவரங்கள் உரிய காலத்திற்குள் தெரிவிக்கப்படாததால் அவை கட்டணமின்றி மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் அனுப்பி அதனை அவர் பெற்றுக் கொண்டார் என்பதற்கு ஆதாரமாக அவரிடமிருந்து பெறப்பட்ட ஒப்புகை அட்டையுடன் கூடிய அறிக்கையை ஆணையத்திற்கு 15 தினங்களுக்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும்**

உத்தரவிடப்படுகிறது. மற்ற இனங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்களை ஆணையம் ஏற்றுக் கொள்கிறது.

• மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவிற்கு உரிய காலத்தில் தகவல் வழங்காததற்கு அப்போதைய (13.12.2022) பொதுத் தகவல் அலுவலர் திரு பாண்டியராஜன், முன்னாள் சார் பதிவாளர் மீது பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று ஆணையத்திற்கு 15 தினங்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

• மேலும் மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு எந்தவித தகவல்/பதில் அளிக்காததற்கு அப்போதைய (03.02.2023) மேல்முறையீட்டு அலுவலர் திரு ராஜ்குமார், (தற்போது துணைப் பதிவுத் துறைத் தலைவர், செங்கல்பட்டு) மீது பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று 15 தினங்களுக்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

• மனுதாரர் தனக்கு இழப்பீடு வழங்குமாறு கோரினார். பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது அதில் சிறு கால தாமதம் உள்ளது, அதற்கு சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரால் கோரப்பட்ட சில தகவல்கள் அளவுக்கதிமானவை, அவற்றை பெற்று தொகுத்து வழங்க இயலாது என்பதால் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க இயலாது என தெரிவித்து வழக்கானது முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண்-SA-5081/SCIC/2023</u>**

பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு:-</u>
பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்,
திருமங்கலம், மதுரை.

**திரு பாண்டியராஜன், முன்னாள் சார் பதிவாளர்**
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்,
திருமங்கலம்,
மதுரை.

**திரு ராஜ்குமார், முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்**
**(தற்போது துணைப் பதிவுத் துறைத் தலைவர், செங்கல்பட்டு)**
பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம்,
செங்கல்பட்டு.

<u>மனுதாரர்:-</u>
திரு S. ஞானசேகர்
காமாட்சி நகர்
அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி எதிரில்,
செக்காணூரணி
மதுரை 625 514.

<u>நகல்</u>
பதிவுத் துறை தலைவர்
பதிவுத் துறை தலைவர் அலுவலகம்
100 சாந்தோம் சாலை,
சென்னை 600 028.

JJ/PS